# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO.100/2020

P.W.1- வெங்கடேசன் த/பெ.காரி முனிஜய்ய நாயுடு

DATE:07.03.2023

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் தொழில் செய்கிறேன். சொந்த பயிர் செய்கிறேனா என்றால் ஆமாம். எத்தனை ஏக்கர் நிலம் வைத்துள்ளேன் என்றால் 15 ஏக்கர் நிலம் வைத்துள்ளேன். வருமான வரி செலுத்துகிறேனா என்றால் ஆமாம். எந்த வருடத்தில் இருந்து செலுத்துகிறேன் என்றால் 2013ல் இருந்து செலுத்துகிறேன். 2013ம் வருடத்தில் இருந்து செலுத்தி வரும் வருமான வரிக்கான கணக்குகளை தாக்கல் செய்துள்ளேனா என்றால் 2013ல் இருந்து தாக்கல் செய்யவில்லை. சூர்யகுமாருக்கு கடன் கொடுத்தற்கான வருமான வரியை மட்டும் தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டபடும் வா.சா.ஆ.10 ஆவணம் எந்த வருடத்திற்கானது என்றால் 2021-2022ம் வருடத்திற்கானது. அந்த கணக்கை 20.11.2021 தேதியில் தாக்கல் செய்ததாக வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ளது என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.10 ஆவணம் வழக்கு தாக்கல் செய்யபட்டதற்கு பின்னிட்ட ஆவணம் என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. கேள்வியை மீண்டும் கேட்ட போது சாட்சி எனக்கு தெரியவில்லை என்று சொல்கிறார். எனக்கு வாச.ஆ.10 ஆவணம் குறித்து நன்றாக தெரியும் என்றாலும், அந்த ஆவணத்தை இந்த வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு பிரதிவாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர் 15.03.2020 தேதியில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரி தான். அந்த அறிவிப்பை தான் வா.சா.ஆ,6 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி

தான். அந்த அறிவிப்பை அவர் எந்த பணமும் செலுத்த தேவையில்லை என்றும், அவரிடம் இருந்து பெற்ற 15 காசோலைகளை திருப்பி கொடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தார் என்றால் அறிவிப்பில் குறிப்பிட்டு இருந்தார். ஆனால் அதில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் பொய்யானது. பிரதிவாதிகள் அனுப்பிய அறிவிப்பிற்கு நான் என்னுடைய வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ.7 பதில் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் சரி தான். அந்த பதில் அறிவிப்பீல் நான் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பொய்யானது என்றாலும் அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டு இருந்த பாண்டுகள் அனைத்தும் என்னால் போலியாக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. நான் அனுப்பிய பதில் அறிவிப்பிற்கு வா.சா.ஆ.9 மறுப்பு அறிவிப்பை அனுப்பினார் என்றால் சரி தான். அந்த மறுப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விவரங்களை நான் மறுக்கிறேன். நான் பணலேவாதேவி வியாபாரம் தான் செய்து வருகிறேன் என்றாலும் விவசாயம் செய்து வருவதாக சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. என்னுடைய தாவாவில் என்னுடைய தொழிலை பற்றி சொல்லவில்லை என்றாலும், விவசாயம் செய்து வந்திருந்தால் அந்த தொழில் பற்றி சொல்லியிருப்பேன் என்றாலும் பணலேவாதேவி தான் செய்து வருவதால் என்னுடைய தொழில் பற்றி தாவாவில் குறிப்பிடப்படவில்லை என்றாலும சரியல்ல. நான் விவசாயம் தான் செய்து வருகிறேன். நான் உண்மையிலேயே 2013ல் இருந்து வருமான வரி செலுத்துவதாக இருந்தால் 2013ல் இருந்து நான் செலுத்திய வருமான வரிக்கான கணக்குகளை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் இவ்வழக்கிற்காக வா.சா.ஆ.10 ஆவணத்தை தயார்செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் மறுக்கிறேன். என் பெயரில் மற்ற நபர்கள் நிறைய குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்வார்கள் என்றாலும் நான் மற்றவர்கள் பெயரிலும் நிறைய பொய் குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்வேன் என்றாலும் சரியல்ல. சூர்யகுமார் மற்றும் அவரின் ஊரை சோந்தவர்கள் என் மீது ஜோடனையாக ஒரு பொய் வழக்கு தாக்கல் செய்து என் மீது கூண்டாஸ் வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கும் முகாந்திரம் எதுவும் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. என் மீது கூண்டாஸ் வழக்கு போடபட்டதற்கு காரணம்

பணலேவாதேவி விசயத்தில் பணம் கொடுத்தவர்களிடத்தில் நான் சட்டத்தை கையில் எடுததுக்கொண்டு அதிகார துஷ்பிரயோகம் செய்ததால் வன்முறையை கையில் எடுத்துக் கொண்டதாலும் தான் என்றாலும் கூண்டாஸ் வழக்கு தாக்கல் செய்ததற்கும் சூர்யகுமாருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. சூர்யகுமார் தான் கூண்டாஸ் வழக்கில் சாட்சியாக உள்ளார். காட்பாடியில் உள்ள நீதிமன்றதில் என் மீது வழக்கு உள்ளது என்றாலும் நானும் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரி தான்.

P REVATHY Digitally signed by P REVATHY
Additional District Judge(FTC),
Vellore.